யிருக்கிறோம். சமீபத்தில் அதை ஏற்றுக்கொள்ள இயலாது என்ற காரணத்தால் தமிழக அரசு நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு, முன்பு கொடுத்த விலைக்கே விவசாயிகளுக்கு உரத்தை வழங்கிக் கொண்டு வருகிறது.

* 295 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether, any subsidy is being given by the State Government for fertilizers and the details thereof; and

(*b*) whether this Government proposes to increase the rates of fertilizers in view of additional taxes by the Central Government?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) பணமான்யம் வழங்கப்படுவதில்லை. 1969–70 மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் எல்லா உரங்களின் வகைகள்மீது கலால் வரியை அதிகப் படுத்தியதின் காரணமாக, இந்திய அரசு எல்லா உரங்களின் விலைகளை 1—3—1969 முதல் உயர்த்தியது. இருப்பினும் மாநில அரசு, டை அமோனியம் பாஸ்பேட், கால்சியம் அமோனியம் நைட்ரேட், அமோனியம் பாஸ்பேட், அமோனியம் குளோரைட், முரியேட் ஆப் பொட்டாஷ், என்.பி.கே. காம்ப்ளக்ஸ் போன்ற சில உரங்களைக் கலால் வரி அதிகரிப்பதற்கு முன்பு நிலவிய விலைகளின் படியே விற்று வருகின்றது. இச்சலுகை 31—3—1972 வரை நீடிக்கும்.

(இ) இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்க வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் ஒத்துக்கொண்டதால், நம்முடைய அரசாங்கம் விவசாயிகளுக்குப் பழைய விலையிலேயே உரத்தை வழங்கி வந்தது. அப்படிக் கொடுத்ததன் விளைவாக நமக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டது? அந்த இழப்பைத் தமிழக அரசு மத்திய அரசிடமிருந்து கேட்டுப் பெறுவதற்கு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, அந்த இழப்பைத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டு விவசாயிகளுக்கு உரத்தை வழங்கியிருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் நஷ்டம் எவ்வளவு என்பதைக் குறிப்பிடுகிறேன்.

கால்சியம் அமோனியம் நைட்ரேட் 26 சத விகிதம் என்ற உரத்தை மத்திய அரசு ஒரு மெட்ரிக் டன் 515 ரூபாய் என்ற அளவில் வழங்கி வருகிறது. நாம் அதை சகாய விலையில் 475 ரூபாய்க்கு வழங்குகிறோம். வித்தியாசம் 40 ரூபாய், அமோனியம் பாஸ்பேட் மத்திய அரசு வழங்குவது 814 ரூபாய், நாம் வழங்குவது 738 ரூபாய், வித்தியாசம் 76 ரூபாய், டை-அமோனியம் பாஸ்பேட் மத்திய அரசு வழங்குவது 1,122 ரூபாய். தமிழக அரசு வழங்குவது 1,000 ரூபாய், வித்தியாசம் 122 ரூபாய். அமோனியம் குளோரைட் மத்திய அரசு வழங்குவது 484 ரூபாய்,

தமிழக அரசு வழங்குவது 450 ரூபாய், வித்தியாசம் 34 ரூபாய், முாயேட் ஆப் பொடாஷ் மத்திய அரசு வழங்குவது 473 ரூபாய், தமிழக அரசு வழங்குவது 445 ரூபாய், வித்தியாசம் 28 ரூபாய். என்.பி.கே. காம்ப்ளக்ஸ் மத்திய அரசு வழங்குவது 755 ரூபாய், தமிழக அரசு வழங்குவது 700 ரூபாய், வித்தியாசம் 55 ரூபாய். மற்றொரு வகை மத்திய அரசு வழங்குவது 1,047 ரூபாய், தமிழக அரசு வழங்குவது 970 ரூபாய், வித்தியாசம் 77 ரூபாய். மற்றொரு வகை மத்திய அரசு வழங்குவது 832 ரூபாய், தமிழக அரசு வழங்குவது 760 ரூபாய், வித்தியாசம் 72 ரூபாய்.

DR. H. V. HANDE : Over a period of years the Central Government was subsidising according to the Hon. Minister's reply these fertilisers and even the procurement price that we give to the farmers was also based on this. Now the procurement price is the same as before. But the Central Government, I understand, are still continuing the subsidy to certain other States, but they had withdrawn the same particularly for this State, I do not know for what reasons. May I know from the Hon. Minister on what basis, what were the reasons, why they withdrew the subsidy since 1969? When they were giving the subsidy all these years, what was the basis on which they removed the subsidy, and has this matter been brought to the attention of the Ministry concerned that we have not yet reduced the procurement price? In view of the fact that the State Government are involving themselves into a loss, because of this we are not reducing the subsidised price—will this Government explain this fact before the Centre and see to it that we get the same subsidy? If we do not get it, may I know whether the State Government have got the answer from the Central Government as to the reasons for which we are not getting the extra subsidy?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் எந்தவிதமான சப்சிடியும் கொடுக்கவில்லை. நம்முடைய தமிழக சர்க்கார்தான் இப்படிப்பட்ட சப்சிடியை வழங்கி வருகிறது. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தருகிறேன்.

Text Books Committee for Schools

* 298 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any Committee has been set up to prescribe text books for students for various classes in High Schools and Colleges in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) அரசு பாட நூல்கள் வெளியிட்டிராத பாடங்களைப் பொறுத்தவரை 1971-72-ம் ஆண்டில் இம்மாநிலத்தில் உள்ள எல்லா அரசு உயர் நிலைப்பள்ளிகளிலும் பயன்படுத்தற்குரிய பாட நூல்களைத்